CONNEMARA PUBLIC LIBRARY
26 MAY 1956
MADRAS

போர் 1 | பொள்ளாச்சி. 11—10—51. | விலை அரையணா. | 4-பக்கம். | வெற்றி 35

சென்னையில் தேர்தல் போர்டுக்கூட்டம்.

பணக்காரர்களுக்குத்தான் அதிக சலுகை.

பொள்ளாச்சிக்கு இருவரும் உண்டு.

சென்னையில் தமிழ்நாடுகாங்கிரஸ் தேர்தல் போர்டுக்கூட்டம் சென்ற ஒரு வாரமாக நடைபெறுகிறது. 3-10-51 ல் முகன்முதலில் தேர்தல்போர்டார் பிரதமர் ஸ்ரீ குமாரசாமிராஜாவின் ஜாகையில் கூடினர். அபேக்ஷகர்கள் பொறுக்குவது''ற்றி பலத்த விவாதம் நடந்ததாகத் தெரிகிறது. பொள்ளாச்சி விஷயமும் அதில்முக்கிய பிரச்சனையாக இருந்ததாகத் தெரிகிறது எவ்வித முடிவுமின்றி போர்டார் கலைந்தனர்: 4-ந் தேதி ஓய்வு என்றும், பூரா விபரங்களும் தெரிந்து கொண்டு 5-ந் தேதி கூடுவதென முடிவு 5, 6, 7, தேதிகளில் போர்டார் கூடி பல தொகுதிகளுக்கு அபேக்ஷகர்களை பொறுக்கி உள்ளனர் மீண்டும் 11, 12 தேதிகளில் கூடி பாக்கியுள்ளவைகளையும் முடிவு செய்து 13-ந் தேதி தலைவர் காமராஜ் டில்லிசெல்வார் எனத் தகவல் கோவை-ஜில்லாவை பொறுத்தவரை இன்னும் திட்டமானமுடிவு எதுவும் ஏற்படவில்லை. 12 ந் தேதி தான் இறுதியான முடிவு எனத்தெரிகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பெரும்பான்மையான இடங்களுக்கு பணக்காரர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. ஊழியர் இல்லை. ஊழியர்களை எடுக்க முயற்சி செய்தாலும் கஷ்டமாக இருக்கிறது. எனத்தலைவர் காமராஜ் வருந்துவதாகத்தெரிகிறது. பொள்ளாசியைப்பொறுத்தவரை ஸ்ரீ வி கே பழனிச்சாமிக்கவுண்டரும், ஸ்ரீ மகாலிங்கமும் இரண்டுதொகுதிகளுக்கும், இடம் பெறலாமென்றும தெரிகிறது. ஸ்ரீ சி சுப்ரமணியம் கோவை டவுன் தொகுதிக்கோ அல்லது வேறு தொகுதிக்கோ போகலாம் என்றும்சொல்லப்படுகிறது. கோவை ஜில்லாவில் பெரும்பாலும் பணக்காரர்களுக்குத்தான் அதிக ஆதரவு போர்டிலிருக்கிறது போலும். ஊழியர்கள் அநேகமாக தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றும் கூறலாம் இறுதி ஜாப்தா டில்லியிலிருந்து வெளியாகும்.

ஸ்ரீ காளியப்பா விலகுகிறார்.

பவானி டவுன் தொகுதிக்கு தேர்தல் போர்டுக்கு மனுச்செய்திருந்த ஓடத்துறை ஸ்ரீ என். கே. காளியப்பா தனது மனுவை வாப்பஸ் பெற்றுக்கொண்டுள்ளார்.

அதிசய சம்பவம்.

பொள்ளாச்சித் தாலூக்கா அங்கலக்கு றிச்சி கிராமத்தில் மாகாளியம்மன் கோவிலுக்குப்பக்கத்திலுள்ள ஒரு வேப்பமரத்தில் 5-10-51 ல் வெள்ளி மாலை 4-30 மணியிலிருந்து ஷை மரத்தில் 6-அடி உயரத்தில் இருந்து பாலும் தேனும் கலந்த ருசியுடன் பால் பொங்கி வடிந்தவண்ணமாக இருக்கிறது. இந்த அதிசய சம்பவத்தைப்பார்க்க ஏராளமான பொதுமக்கள் வந்துபார்த்து தெரிசித்துப்போகிறார்கள்.

பேனா முனை!

வணக்கம், தாங்கள் ஊழியர்கள் பால் கொண்டிருக்கும் நல்லெண்ணத்திற்கு நன்றி. தங்கள் பரிசுத்தமான ஆசைவெற்றிபடைய இன்னும் கொஞ்சம் பலமாய் "பேனா முனை" வேலைசெய்யுமா? அப்படியானல் மகாத்மாவின் ஆசை நிதர்சனமாகும்.

எம். கே. வெங்கிடசாமி,
மேட்டுப்பாளையம்.

14—ந் தேதி ஞாயிறு மாலை 5-மணிக்கு நகர இளைஞர்காங்கிரஸ் ஆபீஸில் ஸ்ரீ பி; கே வெங்கடாசலம் எம். ஏ. அவர்கள் தலைமையில் தேர்தலும் வருங்காலமும் என்பதுபற்றிசொற்பொழிவு பயிற்சி நடைபெறும்:

விரைவில் வெளிவருகிறது!

சிங்காரி (தமிழ்)

லலிதா, பத்மினி, ராகினி, சகஸ்ரநாமம், டி. ஆர். ராமச்சந்திரன்

மற்றும் பல நக்ஷத்திரங்கள் நடிப்பது.

சென்னை, சேலம ஜில்லா உரிமைக்கு:
N. K. காளியப்பா,
3, இரண்டாம் தெரு :-: அபிராமபுரம் :-: சென்னை-18

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 11—10—51. வியாழன்.

தேர்தல் நிலவரம்.

சென்னை சட்டசபைக்கு பொள்ளாச்சி ாலூக்காவிற்கு இரண்டு ஸ்தானங்கள் ண்டு. அதற்கு ஸ்ரீ வி: கே. பழனிச்சா மிக்கவுண்டரையும் ஸ்ரீ மகாலிங்கத்தை யும் இரண்டு பேரையும் இரண்டு தொகு திகட்கும் நிறுத்த வேண்டுமென்றும், கோவை ஸ்ரீ சி. சுப்ரமணியம் கிணத்துக் டவு தொகுதிக்கு வேண்டாமென்றும் ாம் தேர்தல் போர்டாருக்கு யோசனை றி எழுதியிருந்தோம. ஸ்ரீ வி. கே. பி. அவர்கள் நேர்மையும் திறமையும் உள்ள வர். நிர்வாக அனுபவமும் தாலூக்காவில் க்களின் ஆதரவையும் பெற்றவர். ஆக வே அவரைக் கட்டாயம் தேர்ந்தெடுக்க வேண்டும். அதேசந்தர்ப்பத்தில் ஸ்ரீ மகா லிங்கத்தையும் விட்டுவிடுவது புத்திசாலி த்தனமாகாது. இருவரையும் ஸ்ரீ வி. கே. பி, யை டவுன் தொகுதிக்கும், ஸ்ரீ மகாலி ங்கத்தை கிணத்துக்கடவு தொகுதிக்கும் நிறுத்தவேண்டுமென்பதே நமதுயோசனை என்றும் எழுதியிருந்தோம்.

சென்ற 21—9—51 ல் கோவைக்கு போர்டார் வந்திருந்தபொழுது ஸ்ரீ வி. கே. பி. க்கு இருந்த ஆதரவை நேரில் கண்ட நாம் ஸ்ரீ வி. கே. பி.யை எந்தத் தொகுதியில் நிறுத்தினாலும் சரி. அவரு க்கு இரண்டு தொகுதியிலும் நல்ல ஆத ரவு இருக்கிறது என்று எழுதியிருந்தோம் தேர்தல் போர்டார் பொள்ளாச்சித்தாலூ காவின் நிலைமையை நன்கு புரிந்துகொண் டிருக்கிறார்கள்: அதோடு ஸ்ரீ வி. கே. பி. க்கு இங்கு மக்களிடத்தில் உள்ள செல் வாக்கையும் புரிந்துகொண்டிருக்கிறார்கள் அதற்காக நாம் சந்தோஷப்படுகிறோம். ஸ்ரீ வி. கே. பி. விவசாயிகளின் நலனில் அக்கரை உள்ளவர். அதற்காக பாடுபட்டு வருகிறார் ஏழை முதல் பணக்காரர்வரை எல்லோருடனும் சகஜமாக நெருங்கிப்பழ குபவர். காங்கிரஸிற்கும் ஊழியர்களுக் கும் மரியாதை செய்பவர் இவர். கிணத்து க்கடவு தொகுதியில் நின்றாலும் எதிர்ப்பு இருக்காது. அங்குள்ள ஊழியர்கள் வர வேற்பார்கள்.

ஸ்ரீ மகாலிங்கம் தொழில் பிரமுகராக யிருப்பதால் டவுன் தொகுதிதான் வேண் டுமென்று அவர் கேட்பது நியாயம்தான். இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீ வி. கே. பி. யும் டவுன் தொகுதிதான் வேண்டுமென்று பிடிவாதம் செய்வது சரியில்லை. கிணத்து க்கடவு தொகுதிக்கு ஒப்புக்கொள்ளும்படி நாம் வி. கே. பி.க்கு சிபார்சு செய்கிறோம். இவ்விருவர்களும் சுமுகமான முடிவுடன் ஒற்றுமையுடன் வேலை செய்வார்களேயா னால் காங்கிரஸிற்குமகத்தான வெற்றிஉண் டாகும் என்பது நிச்சயம். பொள்ளாச்சி விஷயத்தில் தேர்தல்போர்டார் கவனமாக வும் திறமையாகவும் நடந்து வருவதைப் பாராட்டுகிறோம்: இரண்டு தொகுதிக்கும் இவ்விருவர் தான். சி. சுப்ரமணியம் கோ வை டவுன்தொகுதிக்கோ அல்லது வேறு இடத்திற்கோ போகாலாம். தேர்தல்போ ர்டாரின் முடிவை விரைவில் எதிர்பாருங் கள்.

குருவி ஜோசியம்.

சென்ற வாரம் குருவி சென்னைக்குப் பறந்தது. எங்கு பார்த்தாலும் ஒரே கதர் ஜிப்பா மயம். பெரியஹோட்டல்களில் இடம் கிடையாது. தலைவர் ஸ்ரீ காமராஜ் வீட் டின் முன்னிலையில் ஒரேகூட்டம். தலைவர் தூங்குவதுகூட இல்லை. பிரதமர் ஸ்ரீ ராஜா வின் பங்களாவின் முன்பலமான போலீஸ் பந்தோபஸ்து. பக்தவத்சலம் வீட்டில் ஒரே பேட்டிமயம். சி. பி. சுப்பையாவுக்கு ஏகப்பட்ட கிராக்கி. குருவி இவர்களை எல்லாம் பேட்டிகண்டது. பிறகு கோவை பிரமுகர் இருப்பிடம் விசாரிக்கையில் சென்னையில் வக்கீல் பிரமுகர் ஒருவர் வீட் டில் தங்கி இருப்பதாகத்தகவல் கிடைத்தது: இனம் இனத்தோடுதானே இருக்குமென்று குருவி கூறிக்கொண்டு அங்கு செல்கையில் கோவைப் பிரமுகர் மிகுந்த கோபாக்கினியு டன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க காட்சியளித்தார, இந்தச்சமயத்தில் பேட்டி காண்பது உசிதமல்ல எனக் குருவி திரும்பி விட்டது. பிறகு குருவி ஆராய்ச்சியில் இறங் கியபோது கோவைப் பிரமுகர் எந்தத்தொகு தியில் நிற்பது என்பது பெரிய பிரச்சனையா கிவிட்டது என்றும் எந்தத்தொகுதிக்கு அவ ர்போனாலும் அங்கு பெரிய எதிர்ப்பு கிளம்பி விடுகிறது. எனவே பெரிய ஏமாற்றத்துடன் காட்சியளிக்கிறார் என்று குருவி ஜோசியம் சொல்லுகிறது. குருவி சர்க்கார்மாளிகைக்கு சென்றது. அங்கு ஒரே கூட்டம். தேர்தல் போர்டார்கூட இரண்டு நாள் அங்கு முகாம் போட்டனர். சர்க்கார்மாளிகையில் ஒருரூமில் ஒரே அமர்க்களம். விருந்துகள் வேறு நடந்த தாம். கோவை பிரமுகர் அவர்கள் பக்கம் இரு ப்பதாகவும், அவர்கள் விரும்பாத தலைவர் சட்டசபைக்கு நிச்சயம்வரமுடியாது என்றும் அவர்கள்தான் வரமுடியுமென்றும் பேச்சு. குருவிக்குகூட அச்சம்உண்டாயிற்று.தேர்தல் போர்டின் கூட்டத்தை குருவி எதிர்பார்த் தது மூதல்நாள் போர்டு கூட்டம் முடிந்தவு டனேயே கோவைப் பிரமுகரின் இஷ்டம் போல் எதுவும் நடக்காது ஒன்பதைப் பலர் புரிந்துகொண்டனர். ஜில்லாவில் சுமுகமாக ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு ஸ்ரீ வி: கே. பி: ஸ்ரீ வி. சி. பி, யோசனை அவசியம் என்ற முடிவுக்கு வந்தனர். சமரசம் செய்து கொள்வதாக போர்டில் சொல்லி வந்ததாக வும் சமரச ஏற்பாடுகள் நடப்பதாகவும் குருவி ஜோசியம் சொல்லுகிறது. சமரசம் நல்லமு றையில் நேர்மையான பாதையில், அனைவ ரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் இருக் குமென குருவி ஜோசியம் சொல்கிறது. தே ர்தல் சம்மந்தமாக பல தில்லுமுல்லுகள் நட ந்திருப்பதை குருவி அடுத்தவாரம் ஜோசியம் சொல்லும்:

நேயர் தபால்.

பொள்ளாச்சி பார்க்குக்கு அருகில் அதா வது மேல்புறத்திலுள்ளசந்து மிகவும் அசு த்தமாக இருக்கிறது. எப்பொழுதுமிந்த சந்து இதேநிலைமையிலிருந்தால் பலவியா திகள் பரவும் என்பதை நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. இந்த நிலைமை மாற தாங்கள் இதற்கு ஏற் பாடு செய்யவேண்டும். பார்க்குக்கருகில் உள்ள சந்து இப்படி இருக்கிறதென்றால் இது முனிசிபாலிட்டியாரின் கவனிப்புக் குறைவு என்பது நன்றாகத் தெரிகிறது,

(கே: ஆர். சாரங்கபாணி)

காங்கிரஸிற்கே ஓட் செய்யுங்கள்.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட் &
A. C. C. நீலகிரி பிராண்டு
சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
S. நாகமாணிக்கம்செட்டியார் & பிரதர்,
போன் நெ. 85.
கடை வீதி & மார்க்கட் வீதி

மாடர்ன் கபே,
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

எனமல் & போட்டோ போர்டுகளுக்கு
M. முத்து, பெயிண்டிங் ஒர்க்ஸ்;
மாரப்பேட்டை வீதி.



சந்திரன் காலேஜ் ஸ்கூல்.

298, இடையர் வீதி, கோயமுத்தூர்.

ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C க்கும் 20-வயதிற்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும் 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.

தலைவர்:- S. R. Chandran.

கேள்வி—பதில்.

கே: வக்கீல்கள் வீட்டில் அக்கப்போரும் டாக்டர்கள் வீட்டில் சீக்காளிகளும், புரோகிதர்கள் வீட்டில் விதவைமார்களும் இருந்தால் உலக சகுன பலன் என்ன என்பதை தங்கள் குருவி ஜோசியம் சொல்லுமா?

[சி. கே. நடனம்.]

ப: பிரதி வாரமும் நமது குருவி ஒரு நெல்லைக் கொத்தியவுடன் ஒரு சீட்டும்கொத்தும். அப்போது யாருக்கு வருகிறதோ அவர்களுக்குத்தான் சொல்லும். ஆகையால் நமது குருவி எல்லாவற்றிற்கும் ஜோசியம் சொல்லும் பொறுத்திருங்கள்.

கே: தேர்தல்களிலே எப்பொழுதும் லஞ்சம் கொடுத்து ஓட் பெருகிறார்களே அதே போல் இந்தத் தேர்தலிலும் நடக்குமா?

(கே. ஆர். சாரங்கபாணி)

ப; லஞ்சம் கொடுப்பது அந்தக்காலம். நேர்மையுடன் ஓட்டுப்போடுவதும் பெறுவதும் இந்தக்காலம்.

கே: பல மகாநாடுகளை நடத்தி நடைமுறையில் இன்னும் ஒன்றும் செய்யாத அண்ணாத்துரை கோஷ்டியார், மாநில மகாநாட்டை நடத்தும் நோக்கம் என்ன?

(கே. சி. காந்திபித்தன்)

ப: மக்களை ஏமாற்றி நிதி திரட்டி வாழும்நிலை ஏற்பட்டவுடன் மேலும் மக்களை எந்த வகையில் ஏமாற்றி தங்கள் வயிறு கழுவலாம் என்ற நோக்கமாகத்தான் இருக்கவேண்டும்.

கே; நம் நகரில் ஈ. வெ. ரா. திராவிடக் கொள்கைகளைப்பற்றியும், அரசியல் எப்படி அமையவேண்டும் என்றும், ஜாதி மதம் ஒழியவேண்டுமென்றும்பேசினார். அப்படியானால் இவரோ, இவரைச் சேர்ந்தவர்களோ அவர்கள் பேசும் பிரசாரப் பிரகாரம் எதைச் சாதித்து எதைச் செய்திருக்கிறார்கள்: அப்படி இருந்தால் தெரிவிக்கவும்.

(பி: எம், மதுரநாதன்)

ப: சொல்வதெல்லாம் சீர் திருத்தம். செய்வதெல்லாம் பித்தலாட்டம் காலித்தனம் இவர்கள் சாதித்தது மக்களை ஏமாற்றி 5-லட்சம் ரூபாய்களை நிதி எனத் திரட்டி மணியம்மையை திராவிடத்தாய் ஆக செய்துகொண்டதுதான் !!

கே: சோழவளநாடு சோற் உடைத்து, சோறு கல்லுடைத்து, கல் பல்லுடைத்ததை உணவு மந்திரியார் அறிவாரா?

[ஷண்முகசுந்தரம்.]

ப: அறிந்து என்னசெய்வது. இதுசோழவளநாட்டில் மாத்திரமல்லஎல்லாநாட்டிலும் தான் ஸார்.

கே: எதிர்கால இந்தியாவில் ஜனநாயகம் பூரண மறுமலர்ச்சி அடைந்து மக்களை மகிழ்விக்குமா?

(க. முத்துசா...

ப: மறுமலர்ச்சி ஏற்படும் என்ப... சந்தேகமே வேண்டாம். ஆனால் எல்... ரும் இப்போது இருப்பதுபோல் ... பேறிகளாக இருக்காமல் உழைப்ப... மாறியாகவேண்டும!

கே: படித்த பட்டணப் பெண்ணு... கும் படியாத பட்டிக்காட்டுப் பெண்ணு... என்ன வித்தியாசம்?

(வி. பி. எஸ். சுசீ...

ப: ஆமைக்கும் முயலுக்கும் உ... வித்தியாசம் தான்!

கே: என் மனைவியுடன் மணமகள்... மும் நான்கு முறை பார்த்துவிட்ட... மறுபடியும் அழைத்துச் செல்லவேண்... மென்று பிடிவாதம் செய்கிறாள். அ... பிடிவாதத்திற்கு என்ன வழி?

(சி. டி. என். முத்து...

ப: பிடிவாதத்திற்கு மருந்து ம... கள். படத்திற்கு அழைத்துச் செ... வேண்டியதுதான். இல்லாவிட்டால் ஒ... வேளை பாயாசத்தில் உப்பும் குழம்... காரமும் அதிகமாகப்போட்டு விடப்ே... கிறாள் உமது சகதர்மிணி.

கே: பெண்ணும் ஆணும் யாரி... எப்போது பொய்சொல்லுவார்கள்?

(பி. எஸ். வெங்கடேசன்)

ப: பெண் புதிய ஆடை அணிக... பக்கத்து வீட்டுக்காரியிடம் காண்பி... கும்பொழுது அதிகமாக பொய்சொ... பெருமை அடித்துக்கொள்வாள். ஆ... தன் காதலியிடம் வெளியூர் சென்று ... ததும் தன்னைப்பற்றியும் தன் நண்பர்க... பற்றியும் பொய்சொல்லிப் பெருமை... த்துக்கொள்வான்.

சாராயம்

வைத்திருந்தவருக்கு அபராதம்.

5-10-51 வெள்ளியன்று கோட்... ரோடில் டீ கடை வைத்திருக்கும் கே... நாயர் என்பவர் மீது நாட்டுச்சாரா... வைத்திருந்ததாக டவுன் போலீஸா... கொண்டுவரப்பட்ட வழக்கில் நகர... மாஜிஸ்டிரேட் ஸ்ரீ கூளப்பா அவ... ஷ எதிரிக்கு ரூ. 50 அபராதம் வி... தார்.

வெற்றிகரமாக
நடைபெறுகிறது
கோவை கர்னுடிக்கில்
9-வது வாரம்
பொள்ளாச்சி நாராயணு
டாக்கீஸில்
5-வது வாரம்
எனெஸ்கே பிலிம்ஸ்

மணமகள்

நடிகர்கள்
கிருஷ்ணன் மதுரம்,
பாலையா, சகஸ்ரநாமம்,
டி. பாலசுப்ரமணியம்,
லலிதா — பத்மினி,
பாண்டியன்,
புளிமூட்டை ராம்சாமி
டைரெக்ஷன்:
என். எஸ். கிருஷ்ணன்.
கோவை நீலகிரி
ஜில்லாக்களுக்கு
விநியோகஸ்தர்கள்:

கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்.

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,
கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,
டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்
விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார்-ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்.

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திர வாதத்துடன் கிடைக்கும்.
Prop: B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi